T.C. 066

**109/DM/23**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS
## DEPARTMENTAL TEST FOR AUDIT SUPERINTENDENTS OF HIGHWAYS DEPARTMENT – SECOND PAPER (ELEMENTARY BOOK-KEEPING)

(Without Books)

Maximum Time : 2.30 hours　　　　Maximum Marks : 100

***IMPORTANT INSTRUCTIONS***

**DESCRIPTIVE TYPE**
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**I. Write the Answer any SIX of the following questions.**
**கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஆறினுக்கு விடையெழுதுக.**

**(6 × 4 = 24)**

1. What are the Bases of Accounting?
கணக்கியல் அடிப்படைகள் என்ன?

2. What are the features of Book-keeping?
கணக்கேடுகள் பராமரிப்பின் இயல்புகள் என்ன?

**[Turn over**

3. Define – Bank Reconciliation Statement (BRS).
வங்கிச் சரிகட்டும் பட்டியல் – வரையறு.

4. Define – Cash book.
ரொக்க ஏடு என்றால் என்ன?

5. What are the Classification of accounts?
கணக்குகளின் வகைப்பாடுகள் யாவை?

6. Define – Suspense account.
அனாமத்துக் கணக்கு – வரையறு.

7. What are classification of expenditure?
செலவுகளின் வகைபாடுகள் என்ன?

8. What are the classification of errors?
பிழைகளின் வகைகள் யாவை?

**II. Write the answer any SIX of the following questions.**
**கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஆறினுக்கு விடையெழுதுக.**

**(6 × 6 = 36)**

1. Deepak is a dealer in stationery items. From the following transactions, pass journal entries for the month of January and February, 2018.

| | | |
|---|---|---|
| Jan | | |
| 1 | Commenced business with cash | 2,00,000 |
| 2 | Opened a bank account by depositing cash | 1,00,000 |
| 3 | 'A 4 papers' sold on credit to Padmini and Co. | 60,000 |
| 4 | Bills received from Padmini and Co. for the amount due | |
| 5 | Bills received from Padmini and Co. discounted with the bank | 58,000 |
| Feb | | |
| 15 | Bills of Padmini and Co. dishonoured | |

தீபக் எழுதுபொருள் நிறுவனத்தின் நடவடிக்கைகள் 2018 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பின்வருமாறு இருந்தன: அவைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

ஜனவரி

| | | |
|---|---|---|
| 1 | ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது | 2,00,000 |
| 2 | வங்கியில் கணக்கு ஆரம்பித்து, பணம் செலுத்தியது | 1,00,000 |
| 3 | பத்மினி நிறுவனத்திற்கு A4 தாள்களை கடனுக்கு விற்பனைச் செய்தது | 60,000 |
| 4 | பத்மினி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட தொகைக்கு பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு பெறப்பட்டது | |
| 5 | பத்மினி நிறுவனத்தின் மாற்றுச்சீட்டு வங்கியில் கொடுத்து தள்ளுபடி செய்து பணம் பெறப்பட்டது | 58,000 |

பிப்ரவரி

15 பத்மினி நிறுவனத்தின் மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டது.

2. Record the following transactions in the purchases book of Shanthi Furniture Mart :

2017

March 1 Purchased from Mohan Furniture Mart, Madurai

20 chairs @ 450 each

2 tables @ 1,000 each

Less : Trade discount @ 10%

March 7 Bought from Ramesh & Co., Royapettah

2 stools @ 500 each

10 rolling chairs @ 200 each

Delivery charges and cartage 150

March 21 Purchased from Kamal & Co., Karaikkal

10 chairs @ 750 each

15 steel cabinets @ 1,500 each

Packing and delivery charges 250

Less : Trade discount @ 10%

March 25 Purchased from Jemini & Sons, Chennai

2 typewriters @ 7,750 for office use

பின்வரும் நடவடிக்கைகளை சாந்தி அறைகலன் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

2017

| | | |
|---|---|---|
| மார்ச் 1 | மதுரை, மோகன் அறைகலன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது<br>20 நாற்காலிகள் ஒன்று 450 வீதம்<br>2 மேஜைகள் ஒன்று 1,000 வீதம்<br>இதில், 10 சதவீதம் வியாபாரத் தள்ளுபடி நீக்குக. |
| மார்ச் 7 | இராயப்பேட்டை, இரமேஷ் நிறுவனத்திடமிருந்து வாங்கியது<br>2 மர நாற்காலிகள் ஒன்று 500 வீதம்<br>10 மடக்கு நாற்காலிகள் ஒன்று 200 வீதம்<br>இதற்கு, வண்டிக்கட்டணம் மற்றும் அனுப்புகைச் செலவுகள் 150 |
| மார்ச் 21 | காரைக்கால், கமால் நிறுவனத்திடமிருந்து வாங்கியது<br>10 நாற்காலிகள் ஒன்று 750 வீதம்<br>15 இரும்பு அலமாரிகள் ஒன்று 1,500 வீதம்<br>இதற்கு, கட்டுமம் மற்றும் அளிப்புச் செலவு 250<br>இதில், 10 சதவீதம் வியாபாரத் தள்ளுபடி நீக்குக. |
| மார்ச் 25 | சென்னை, ஜெமினி விற்பனையகத்திடமிருந்து<br>2 தட்டச்சு இயந்திரங்கள் ஒன்று 7,750 வீதம்<br>அலுவலகப் பணிக்கென வாங்கப்பட்டது. |

3. From the following information, prepare bank reconciliation statement to find out balance as per bank statement on 31st March, 2017.

| | Particulars | Rs. |
|---|---|---|
| (a) | Cheques deposited but not yet collected by the bank | 500 |
| (b) | Cheque issued but not yet presented for payment | 1,000 |
| (c) | Bank interest charged | 100 |
| (d) | Rent paid by bank as per standing instruction | 200 |
| (e) | Cash book balance | 300 |

கீழ்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச்-31, ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டறியவும்.

| | விவரம் | |
|---|---|---|
| (அ) | வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | 500 |
| (ஆ) | விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது | 1,000 |
| (இ) | வங்கி வசூலித்த வட்டி | 100 |
| (ஈ) | நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை | 200 |
| (உ) | ரொக்க ஏட்டின் படி இருப்பு | 300 |

4. Write any six differences between Trial Balance and Balance Sheet.

இருப்பாய்விற்கும் இருப்புநிலைக்குறிப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் ஆறு எழுதுக.

5. What are the importance of Accounting?

கணக்கியலின் முக்கியத்துவம் என்ன?

6. The following errors were detected before preparation of trial balance. Rectify them.

(a) Purchases returns book is undercast by 500

(b) Purchases returns book is overcast by 600

(c) Sales returns book is undercast by 700

(d) Sales returns book is overcast by 800.

இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்கண்ட பிழைகள் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.

(அ) கொள்முதல் திருப்ப ஏட்டில் 500 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டில் 600 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

(இ) விற்பனைத் திருப்ப ஏட்டில் 700 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ஈ) விற்பனைத் திருப்ப ஏட்டில் 800 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

7. What are the Advantages of Book - keeping?

கணக்கேடுகள் பராமரிப்பின் நன்மைகள் யாவை?

## III. Write the answer any FOUR of the following questions.

**கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் நான்கிற்கு விடை எழுதுக.** **(4 × 10 = 40)**

1. What are the Common adjustments and adjustment entries which are made while preparing the final accounts?

இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்ய வேண்டிய பொதுவான சரிகட்டுதல்களும் மற்றும் சரிகட்டுப் பதிவுகளும் யாவை?

2. From the following balances extracted from the books of Pearl, a trader, prepare trial balance as on 31st March, 2017.

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Capital | 44,000 | Interest on investment | 2,000 |
| Bills receivable | 5,000 | Customs duty | 3,000 |
| Wages | 800 | Computer | 20,000 |
| Drawings | 4,000 | Sales | 72,000 |
| Purchases | 75,000 | Opening stock | 10,200 |

பியர்ல் என்ற வியாபாரியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து 31.3.2017 அன்றைய இருப்பாய்வினைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 44,000 | முதலீடு மீதான வட்டி | 2,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 5,000 | சுங்க வரி | 3,000 |
| கூலி | 800 | கணிப்பொறி | 20,000 |
| எடுப்புகள் | 4,000 | விற்பனை | 72,000 |
| கொள்முதல் | 75,000 | தொடக்கச் சரக்கிருப்பு | 10,200 |

3. Prepare three column cash book in the books of Thiru Durairaj.

| 2017 | | | Rs. |
|---|---|---|---|
| March | 1 | Cash in hand | 12,000 |
| | | Cash at bank | 15,000 |
| | 2 | Cash paid into bank | 11,000 |
| | 3 | Goods sold 18,500. Half of it is received in cash and half of it is received by cheque which is immediately deposited in the bank | |
| | 4 | Sold on credit to Jayaraj for | 7,000 |
| | 8 | Jayaraj sent a cheque in full settlement | 6,900 |

| 2017 | | Rs. |
|---|---|---|
| 12 | Jayaraj's cheque was sent to bank | |
| 14 | Bought goods from Iqbal and issued a cheque to him immediately | 8,500 |
| 15 | Bought goods from Murali on credit | 4,000 |
| 19 | Received a cheque from Kannappan in full settlement of his account of 2,000 | 1,975 |
| 20 | Drew cash 3,000 and by cheque 5,000 for personal use | |
| 25 | Paid Vinod by cheque in full settlement of his account of 2,000 | 1,850 |

பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு துரைராஜ் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 | | ரூ. |
|---|---|---|
| மார்ச் 1 | ரொக்க இருப்பு | 12,000 |
| | வங்கி இருப்பு | 15,000 |
| 2 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | 11,000 |
| 3 | சரக்கு விற்றது 18,500 பாதி ரொக்கமாகவும், பாதி காசோலையாகவும் பெறப்பட்டு, அக்காசோலை உடனடியாக வங்கியில் செலுத்தப்பட்டது | |
| 4 | ஜெயராஜ் என்பவருக்கு கடனுக்கு விற்றது | 7,000 |
| 8 | ஜெயராஜ் காசோலை அனுப்பி தனது கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது | 6,900 |
| 12 | ஜெயராஜிடமிருந்து பெற்ற காசோலை வங்கியில் செலுத்தப்பட்டது | |
| 14 | இக்பால் என்பவரிடமிருந்து சரக்குகள் வாங்கி அவருக்கு உடனடியாக காசோலை விடுக்கப்பட்டது | 8,500 |
| 15 | முரளி என்பவரிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கப்பட்டது | 4,000 |
| 19 | கண்ணப்பனிடமிருந்து 1,975 க்கான காசோலையைப் பெற்றுக் கொண்டு 2,000 க்கான கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது | |
| 20 | சொந்த செலவுகளுக்காக ரொக்கம் எடுத்தது 3,000 காசோலை மூலம் எடுத்தது 5,000 | |
| 25 | வினோத்திற்கு 1,850 க்கு காசோலை விடுத்து தீர்த்துக் கொண்ட கணக்கு | 2,000 |

4. Prepare a Bank Reconciliation (BRS) for the Following details.

On 31st March, 2018, the bank column of the cash book of Senthamarai Traders showed a debit balance of 40,200. On examining the cash book and the bank statement, it was found that :

(a) A cheque for 2,240 deposited on 29th March, 2018 was credited by the bank only On 4th April, 2018.

(b) A payment made through net banking for 180 has been entered twice in the cash book.

(c) A bill of exchange for 1,000 was discounted by Senthamarai Traders with its bank. This bill was dishonoured on 30th March, 2018 but no entry had been made in the books of Senthamarai Traders.

(d) Cheques amounting to 500 which were issued to trade payables and entered in the cash book before 31st March, 2018 were not presented for payment until that date.

(e) Cheque amounting to 2,000 had been recorded in the cash book as having been deposited into the bank on 30th March, 2018, but was entered in the bank statement on 3rd April, 2018.

(f) Transport subsidy amounting to 3,000 received from the Government of Tamilnadu directly by the bank, but not advised to the Senthamarai Traders.

(g) A sum of 1,500 was wrongly debited to Senthamarai Traders by the bank for which no details are available.

(h) On 31st March, 2018 the payment side of the cash book was undercast by 1,200.

பின்வரும் விவரங்களுக்கு வங்கி சரிகட்டும் பட்டியல் தயார் செய்க.

செந்தாமரை நிறுவனத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளன்றைய ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியானது 40,200 பற்றிருப்பைக் காட்டியது. ரொக்க ஏட்டையும், வங்கி அறிக்கையையும் ஆய்வு செய்தபோது கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

(அ) 2018 மார்ச் 29 அன்று வங்கியில் 2,240க்குச் செலுத்திய காசோலை 2018 ஏப்ரல் 4 அன்று தான் வங்கியால் வரவு வைக்கப்பட்டது.

(ஆ) இணைய வங்கி வாயிலாக செலுத்திய 180 ரொக்க ஏட்டில் இரண்டு முறை பதியப்பட்டது.

(இ) 1,000 மதிப்புள்ள மாற்றுச்சீட்டை, செந்தாமரை நிறுவனம் அதன் வங்கியில் தள்ளுபடி செய்தது. 2018 மார்ச் 30 அன்று அந்த மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டது. ஆனால், இதற்கான பதிவுகள் ஏதும் செந்தாமரை நிறுவன ஏடுகளில் செய்யப்படவில்லை.

(ஈ) 500 மதிப்புள்ள காசோலை நிறுவனம் செலுத்த வேண்டிய கடனுக்காக, விடுக்கப்பட்டு ரொக்க ஏட்டில் 2018 மார்ச் 31க்கு முன்னர் பதியப்பெற்றது. ஆனால், அந்நாள் வரை வங்கியில் செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை.

(உ) 2018 மார்ச் 30 அன்று 2,000 மதிப்புள்ள காசோலை ரொக்க ஏட்டில் வங்கியில் செலுத்தப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது. ஆனால் வங்கி அறிக்கையில் 2018 ஏப்ரல் 3 அன்று பதியப்பெற்றது.

(ஊ) வங்கி நேரடியாக தமிழக அரசிடமிருந்து போக்குவரத்து மானியம் 3,000 பெற்றது. ஆனால் இது குறித்து செந்தாமரை நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படவில்லை.

(எ) 1,500 தவறுதலாக செந்தாமரை நிறுவனக் கணக்கில் வங்கியால் பற்று வைக்கப்பட்டது. இது குறித்த விவரங்கள் ஏதுமில்லை.

(ஏ) 2018 மார்ச், 31 ரொக்க ஏட்டின் செலுத்தல்கள் பகுதி 1,200 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.

5. From the following information, prepare trading and profit and loss account of Abdul Rahuman for the year ending 31st December, 2016 and balance sheet as on that date.

The closing stock on 31st December, 2016 was valued at 2,000.

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Opening stock | 500 | Purchases | 1,300 |
| Sales | 5,000 | Wages | 700 |
| Discount received | 500 | Salary | 500 |
| Building | 50,000 | Capital | 50,000 |
| Cash in hand | 4,500 | | |

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து அப்துல் ரகுமான் என்பவரின் 2016, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

31.12.2016 அன்று இறுதிச் சரக்கிருப்பு ரூ.2,000 என்று மதிப்பிடப்படுகிறது.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 500 | கொள்முதல் | 1,300 |
| விற்பனை | 5,000 | கூலி | 700 |
| பெற்ற தள்ளுபடி | 500 | சம்பளம் | 500 |
| கட்டடம் | 50,000 | முதல் | 50,000 |
| கை ரொக்கம் | 4,500 | | |